1972 ஆகஸ்டு 9]

வடகோயம்புத்தூர் மேம்பாலம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வடகோயம்புத்தூர் இரயில்வே கேட் அடிக்கடி அடைக்கப்பட்டு நெடுநேரம் போக்குவரத்து தடைப்படுவதால், அங்கு ஒரு மேம்பாலம் அமைத்திடுகிற செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இது பரிசிலனையில் உள்ளது.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் அமுல் படுத்துவதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மேம்பாலத்தைப் பொறுத்த வரையில், இது கோவை முனிசிபாலிடி எல்லைக்குள்ளே அமையப்படவேண்டியதாக இருக்கிறது. முனிசிபாலிடியைப் பொறுத்த வரையில், அதனுடைய பங்கைச் செலுத்தவேண்டும். இரயில்வே இலாகாவும் கோவை முனிசிபாலிடியும் பங்கிட்டுக் கொள்ளவேண்டிய இந்தச் செலவினங்கள் பொறுத்து நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறது. விரைவாக நிறைவேற்ற எல்லாச் செயல்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

Railway Overbridge at Subramaniapuram

* 21. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether, after the completion of the overbridge over the railway level crossing at Subramaniapuram, the present Tirupparankundram Road and the level crossing will be permanently closed; and

(*b*) if so, the reasons therefor?

சுப்பிரமணியபுரத்திலுள்ள இருப்புப்பாதை மேம்பாலம்

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுப்பிரமணியபுரத்திலுள்ள இருப்புப்பாதை சாலைக்கடவின் மேல் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகு தற்போதுள்ள திருப்பரங்குன்றம் சாலை, இருப்புப்பாதைக் கடவு ஆகியவை நிலையாக மூடப்படுமா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) சாலைக்கடவினை அடிக்கடி மூடப்படுவதால் உண்டாகும் போக்கு வரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக மேம்பாலம் கட்டப்படுவதால் இது கட்டி முடிக்கப்பட்ட பிறகு சாலைக் கடவு நிலையாக மூடப்படும். போக்குவரத்து மேம்பாலம் வழியாக இருக்கும்.

THIRU D. SANTOSHAM: Sir, on the northern side of the railway line are the Power House and various streets starting from it and on the southern side is Subramaniapuram with a number of streets. It is very necessary to have a link road between the two residential areas and it is also possible to have a wider level crossing. Will the Government consider the possibility of having this road open so that these two residential areas may have a link?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The service roads will be handed over to the Corporation for further maintenance and as the existing level crossing will be replaced by the over bridge, level crossings on the service roads will be necessary to have continuous flow of traffic in the service roads. The question of providing level crossings on the service roads has to be taken up by the Madurai Corporation, as they have to meet the maintenance and recurring expenditure, etc., the roads being vested with them.

மதுரை மாநகராட்சி மன்றம் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. மதுரை மாநகராட்சி மன்றம் அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறது. ஆக, இதை பரிசிலித்துக் கொண்டிருக்கிறோம். மெயின்டெனன்ஸ்—பராமரிப்புச் செலவு யார் செய்வது என்பது பரிசிலனையில் இருக்கிறது. முடிவு செய்து சொல்லவேண்டிய விஷயம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: கேள்விகள் 22, 23, 24 ஒத்திப் போடப்படுகின்றன.

Bus fares in Coimbatore Town.

* 25 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether the Government are aware of the increase in bus fares in Coimbatore Town from August 1971; and

(*b*) if so, the details thereof?